## மேட்டூர் அணையின் நீர் திறப்பு: 13 ஆயிரம் கன அடியாக குறைப்பு

First Published : 13 Jul 2011 09:17:12 AM IST

மேட்டூர், ஜூலை 12: மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு, விநாடிக்கு 13 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 நாள்களாக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், பாசனப் பகுதிகளில் பாசனத் தேவை குறைந்ததால் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 13 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

இப்போது நாள் ஒன்றுக்கு ஒரு டி.எம்.சி. வீதம் மேட்டூர் அணையின் நீர் இருப்பு குறைந்து வருகிறது. காவிரி டெல்டா பாசனத்துக்கு ஜனவரி 28 வரை தண்ணீர் வழங்குவது பருவ மழையைப் பொறுத்தே முடிவு செய்ய முடியும்.

## 50 ஏக்கர் நிலத்தை அபகரிக்க முயற்சி: நரிக்குறவர்கள் ஆர்ப்பாட்டம்

First Published : 13 Jul 2011 06:31:01 AM IST

செங்குன்றம், ஜூலை 12: சோழவரம் ஒன்றியம் ஒரக்காடு கிராமத்தில் நரிக்குறவர்களுக்கென ஒதுக்கப்பட்ட 50 ஏக்கர் நிலத்தை அபகரிக்க முயற்சி நடப்பதை எதிர்த்து சார்பதிவாளர் அலுவலகம் முன்பு நரிக்குறவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சோழவரம் ஒன்றியம் ஒரக்காடு கிராமத்தில் 1954ல் அப்போதைய முதல்வர் பக்தவத்சலம் நரிக்குறவர்களுக்கென 50 ஏக்கர் நிலத்தை அவர்கள் குடியிருப்பதற்காக ஒதுக்கித் தந்தார். அந்த இடத்தை தற்போது தனி நபர் ஒருவர் ஆக்கிரமித்து செங்குன்றம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய முயற்சி செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதனை அறிந்த தமிழ்நாடு நரிக்குறவர் மற்றும் பழங்குடியினர் மக்கள் சமுதாய சங்கத் தலைவர் தேவதாஸ் தலைமையில் பொதுச் செயலாளர் இந்திரா முன்னிலையில் 100க்கு மேற்பட்ட நரிக்குறவர்கள் செங்குன்றம் சார்பதிவாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நரிக்குறவர் சமுதாய மக்களுக்கு குடியிருக்க ஒதுக்கப்பட்ட நிலத்தை தனி நபருக்கு பதிவு செய்வது தவறு. இதனை தடுக்காவிட்டால் முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து மனு கொடுக்க இருப்பதாகப் பொதுச் செயலாளர் இந்திரா தெரிவித்தார்.

நிர்வாகிகள் ஒன்றாகச் சென்று செங்குன்றம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இணை சார்பதிவாளர் விஜயராகவனிடம் கோரிக்கை மனு ஒன்றை கொடுத்துள்ளனர்.

**குறுவை நெல்: ஏக்கருக்கு ரூ. 22,592 வரை காப்பீடு செய்யலாம்**

First Published : 13 Jul 2011 08:27:19 AM IST

தஞ்சாவூர், ஜூலை 12: நடப்பு குறுவை நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ. 22,592 வரை காப்பீடு செய்யலாம் என தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வி. பழனியப்பன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் 2011 ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான கரீப் பருவத்துக்கான காப்பீட்டு வழிமுறைகளை அறிவித்துள்ளது.

அதன்படி நிகழாண்டில் குறுவைக்கு கடன் பெறும் தொகைக்கோ அல்லது கூடுதல் மகசூல் மதிப்பான ஏக்கருக்கு ரூ. 13,559 அல்லது இதைவிடவும் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று நினைத்தால், ஏக்கருக்கு ரூ. 22,592 என்ற அளவில் தங்கள் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம்.

இதில் கடன் அளவிற்கு உண்டான தொகைக்கான பிரீமியம் கட்டாயமாக கடன் வழங்கும் நிறுவனத்தால் பிடித்தம் செய்யப்படும். கூடுதல் மகசூலுக்கு காப்பீடு செய்ய விரும்புபவர்கள் தங்கள் விருப்பத்தை உரிய படிவத்தில் எழுதித் தர வேண்டும். கடன் தொகைக்கு சராசரி மகசூலுக்கு பிரீமியமாக 2.50 சதம் கூடுதல் மகசூலுக்கு 3.25 சதம் பிரீமியமாக வசூலிக்கப்படும்.

இதன்படி கடன் வாங்கும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் கடன் வாங்காத விவசாயிகள் சாதாரண பிரீமியமாக 50 சத மானியம் போக ஏக்கருக்கு ரூ. 169 செலுத்த வேண்டும். கூடுதல் மகசூலுக்கு ரூ. 316 பிரீமியமாக செலுத்த வேண்டும். கடன் வாங்காத சிறு குறு விவசாயிகள் 55 மானியம் போக சாதாரண மகசூலுக்கு ரூ. 153, கூடுதல் மகசூலுக்கு ரூ. 285 பிரீமியமாக செலுத்த வேண்டும்.

கடன் வாங்காத விவசாயிகள் ஜூலை 15-க்குள்ளும், கடன் வாங்கும் விவசாயிகள் ஜூலை 31-க்குள்ளும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அல்லது சேமிப்புக் கணக்கு வைத்துள்ள தேசியமய வங்கிகளில் பிரீமியத் தொகையை செலுத்தி திட்டத்தில் சேரலாம்.

கடந்த ஆண்டில் குறுவைக்கு காப்பீடு செய்த தஞ்சாவூர், பாபநாசம், கண்டியூர் பகுதியைச் சேர்ந்த 120 விவசாயிகளுக்கு ரூ. 1,94,631 இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சம்பா தாளடி பட்டத்தில் பயிர் காப்பீடு செய்தவர்களுக்கு மகசூல் அடிப்படையில் இழப்பீடு இருந்தால் பகுதி வாரியாக எவ்வளவு என்பது இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும் என்றார் பழனியப்பன்.

தினமலர்

**ஆமணக்கு ஒய்.ஆர்.சி.எச்.1**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,00:00 IST



மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் சேலம் மாவட்டம் ஏத்தாப்பூரில் அமைந்துள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒய்.ஆர்.சி.எச்.1 என்ற வீரிய ஒட்டு ஆமணக்கு 2009ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. குறை வான வயது உடையதால் மானாவாரிக்கும், பாசனநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கும் மிகவும் ஏற்றது.

150-180 நாட்கள் வயதுஉடையது. அதிக கிளைப்பு, நடுத்தர உயரம், அதிக விளைச்சல். மானாவாரியில் எக்டருக்கு 1860 கிலோவும் இறவையில் 3500 கிலோவும் கொடுக்கவல்லது. காய்

குலைகளில் பெண் பூக்களின் அளவு 95 சதவீதத்திற்கு மேல் இருக்கும். செடிகள் சாயாத, காய்கள் வெடிக்காத தன்மையைக் கொண்ட, அதிக உரமேற்கும் திறனும் கொண்டவை.

குறுகிய கால இடைவெளியில் அதிக குலைகள் (40-50) ஒரு செடிக்கு வைக்கும் பண்புடையது. செடியின் உயரமும் கிளைகளின் நீளமும் குறைவாக உள்ளதால் ஊடுபயிர் சாகுபடிக்கு ஏற்றது. குறைவான வயதுடைய காரணத்தினால் தமிழகத்தில் ஆடிப் பட்டத்தில் சாகுபடி செய்யும்போது காய் அழுகல் நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. குறைவான பச்சை தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ தாக்குதல், காய்ப்புழுவுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. நல்ல வடிகால் வசதியுடன் கூடிய கார, அமிலத்தன்மையற்ற வண்டல், செம்மண் நிலங்கள் மிகவும் உகந்தவை. வெப்பநிலை 20 டிகிரி முதல் 32 டிகிரி செல்சியஸ் வரை நல்ல பலனைத் தரக்கூடியது. வெப்பநிலை அதிகமானால் ஆண்பூக்கள் அதிகம் தோன்றி விளைச்சல் குறையும். மழைஅளவு 750மி.மீ. அளவு ஆண்டுக்கு இருக்க வேண்டும். நீர் தேங்கி நிற்கும் நிலத்தில் பயிர் செய்வதை தவிர்க்க வேண்டும்.

மானாவாரியில் ஜூன் - ஜூலை (ஆடிப்பட்டம்) இறவை - ஜூன் - ஜூலை (ஆடிப்பட்டம்), நவம்பர் - டிசம்பர் (கார்த்திகைப்பட்டம்) ஆகிய பட்டத்தில் 90 து 60 செ.மீ. இடைவெளியில் இறவையில் 120 து 90 செ.மீ. இடைவெளியிலும் பயிரிடலாம். ஒரு கிலோ விதைக்கு கார்பண்டாசிம் 2 கிராம் கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்க வேண்டும். டிரைகோடெர்மா விரிடி உயிர்ப்பூசணம் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதையை நேர்த்தி செய்ய வேண்டும். விதையினை 10 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து விதைத்தால் முளைப்புத்திறன் அதிகரிக்கும். குத்துக்கு ஒரு விதை விதைக்க வேண்டும்.

இறவையில் எக்டருக்கு 12.5 டன் தொழு உரமும், 60:30:30 கிலோ தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இடவேண்டும். அதாவது 30:30:30 கிலோ உரங்களை அடியுரமாகவும், மீதமுள்ள 30 கிலோ தழை உரத்தை 2 தவணைகளாகப் பிரித்து 30வது நாளும், 60வது நாளும் இடவேண்டும். மானாவாரியில் 45:15:15 கிலோ தேவைப்படும். 30:15:15 கிலோவை அடியுரமாகவும், மீதமுள்ள 15 கிலோ தழைச்சத்தை மேலுரமாக மழை கிடைக்கும் போது 40-60 நாட்களுக்குள் இடவேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைத்தவுடன் ஒரு முறையும், உயிர்த் தண்ணீருக்கு பின் மண்ணின் தன்மைக்கு ஏற்ப 10-15 நாட்கள் இடைவெளியிலும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். நீர் நிலத்தில் நீண்டகாலத்திற்கு தேங்காமல் பார்த்துக்கொள்வது அவசியம்.

இரண்டு விதை முளைத்த இடத்தில் 10-15வது நாளில் ஒரு செடியை அகற்ற வேண்டும். முளைக்காத இடத்தில் மீண்டும் விதைத்து பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். விதைத்த

3 நாட்களுக்குள் புளூகுளோரலின் ஏக்கருக்கு 800 மிலி அல்லது பெண்டிமெதிலின் 1300 மிலி தெளித்து களைகளைக் கட்டுப்படுத்தலாம். விதைத்த 20, 40வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும். ஆமணக்கில் இலைப்புழுக்கள் (காவடிப்புழு, புரோடீனியா, கம்பளிப்புழுக்கள்), சாறு உறிஞ்சும் பூச்சிகள் (தத்துப்பூச்சி, சிவப்பு சிலந்தி பூச்சி), காய்ப்புழுக்கள் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன. தகுந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (தகவல்: சா.ரா.வெங்கடாசலம், வீ.பழனிச்சாமி, கு.செல்வராணி, பயிர் பெருக்கம் மற்றும் மரபியல் வேளாண் விரிவாக்கம், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், சேலம். 94432 10883.-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**வேலிமசால்**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,00:00 IST

தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக கால்நடை தீவனமான ""வேலிமசால்'' பயிரிடலாம். கால்நடை தீவனமாக புல்வகையை சேர்ந்த வேலிமசால் பயன்படுகிறது. இதற்கு டிவிடிவி, கூவாப்புல், வேலிபுல் என பல பெயர் உள்ளது. விதை விதைத்த நான்காவது நாளில் செடி துளிர்த்துவிடும். தென்னைக்கு காட்டும் தண்ணீரே காட்டினால் போதுமானது. விரைந்து வளரக்கூடிய இந்த புல் செடியை வெட்டி கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கலாம். கால்நடைகளுக்கான தீவனம் குறைந்து வரும் இவ்வேளையில் இதுபோன்ற செடிகள் நல்ல லாபத்தை விவசாயிகளுக்கு ஈட்டித்தருகிறது. ஐந்தாண்டு வரை இந்த செடியிலிருந்து இலைகளை அறுக்கலாம். செடியில் பச்சையம் சத்து அதிகளவு உள்ளதால் கால்நடைகளுக்கு மட்டுமல்ல, தென்னை மரத்துக்கு உரமாகவும் பயன்படுத்தலாம். செடியின் ஒரு கிலோ விதை 650 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதன்மூலமும் நல்ல வருவாய் கிடைக்கும். தென்னை, பாக்கு, வாழைகளுக்கு இடையே இதை ஊடுபயிராக பயிரிடலாம்.

இரும்புக்கலப்பை கொண்டு இரு முறையும், நாட்டுக்கலப்பை கொண்டு மூன்று அல்லது நான்கு முறையும் உழவேண்டும். பார் பிடித்தல் 6 மீ நீளம் மற்றும் 1 மீ இடைவெளியில் பார் பிடித்து பார் களுக்கிடையில் வாய்க்கால்களை அமைக்க வேண்டும். மண் பரிசோதனையின்படி உரமிட வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிடில் (எக்டருக்கு) அடியுரமாக 10:60:30 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இடவும்.

விதை அளவு - தீவனத்திற்கு எக்டருக்கு 10 கிலோ.

**அமில நேர்த்தி**: விதைகளை அடர் கந்தக அமிலத்தில் மூன்று நிமிடம் ஊறவைத்து விதைகளை நன்கு கழுவிய பின் குளிர்நீரில் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். அல்லது விதைகளை

வெந்நீரில் நான்கு நிமிடம் ஊறவைத்து பின் குளிர்நீரில் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மேலும் எளிய முறையாக பாத்திரத்தில் நீரை 1000 செ.கி.க்கு கொதிக்கவைத்து பின் 4 நிமிடம் ஆறவைத்து (800 செ.கி) விதைகளை 3-4 நிமிடம் ஊறவைக்க வேண்டும். அடுத்து சூடான நீரை வடித்துவிட்டு குளிர்ந்த நீரில் இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். விதைகளை 72 மணி நேரம் குளிர்ந்த நீரில் ஊறவைத்தும் வைக்கலாம். விதைநேர்த்தி செய்தபின் ரைசோபியம் உயிர் உரத்தை அரிசிக்கஞ்சியில் கலந்து காயவைத்தபின் விதைக்க வேண்டும்.

**நீர் மேலாண்மை**: பாசன பகுதிகளில் வளர்க்கப்படும் பயிர்களுக்கு நீர் மேலாண்மை செய்திட வேண்டும். வளர்ச்சியடைந்துவிட்டால் சில மாதங்களின் வறண்ட சூழ்நிலையையும்கூட தாக்குப்பிடித்து விடும். இருந்த போதிலும் விரைவான இளஞ்செடிகளின் வளர்ச்சிக்கு நிலத்தில் 5 முதல் 6 மாதங்கள் வரை ஈரம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**அறுவடை**: நட்டபின் 6 மாதத்திற்கு பிறகு அறுவடை செய்யலாம். தண்டின் விட்டம் 3 செ.மீ. அடைந்தவுடன் (அல்லது) ஒருமுறை விதை உற்பத்திக்கு விட்டவுடன் முதல் அறுவடை செய்யலாம். அதற்கு பிறகு 40-80 நாட்களில் வளர்ச்சி மற்றும் பருவத்திற்கேற்ப அறுவடை செய்யலாம். வறட்சி அதிகமுள்ள பகுதிகளில் மரத்தை இரண்டு முதல் மூன்று வருடத்திற்கு அறுவடை செய்யாமல் விட்டுவிட வேண்டும். மரத்தை தரைமட்டத்திலிருந்து 90-100 செ.மீ. உயரம் விட்டு அறுவடை செய்ய வேண்டும். பூட்டு மற்றும் எரிபொருளாக பயன்படுத்த மரத்தை 2.5 அல்லது 5 வருடத்திற்கு வெட்டாமல் பக்கக்கிளைகளை அகற்றிவிட வேண்டும். தொடர்புக்கு: ஆர்.ஜி.ரீஹானா, அக்ரி கிளினிக், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், தாராபுரம்-638 657.**ஆர்.ஜி.ரீஹானா, தாராபுரம், 89037 57427.**

**செம்மை நெல் வயல்களில் வேளாண் அதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,01:41 IST

சேத்தியாத்தோப்பு : வாழக்கொல்லை கிராமத்தில் செம்மை நெல் நடவை வேளாண் உதவி இயக்குனர் ஆய்வு செய்தார். சேத்தியாத்தோப்பை அடுத்த வாழைக்கொல்லை கிராமத்தில் 125 ஏக்கரில் குறுவை நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. அதில் 50 ஏக்கர் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலங்களை கீரப்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் ஆய்வு செய்தார். பின்னர் செந்தில்ராயர் என்பவரது வயலில் கோனா வீடர் கருவி மூலம் களை எடுக்கும் முறை மற்றும் மேலுரம் இடும் முறையை செயல் விளக்கம் செய்து காண்பித்தார். அவருடன் துணை வேளாண் அலுவலர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

780 கிலோ தரமில்லாத நெல் விதை அரிசி ஆலைக்கு அனுப்ப உத்தரவு

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,03:19 IST

ஈரோடு:தனியார் விதை விற்பனை நிலையத்தில் இருப்பில் இருந்த 780 கிலோ தரமில்லாத நெல் விதையை, அரிசி ஆலைக்கு அனுப்ப விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமொழி உத்தரவு பிறப்பித்துள்ளார்.ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமொழி தலைமையில் விதை ஆய்வாளர்கள் சரவணன், பாலசுப்பிரமணி ஆகியோர் அடங்கிய குழுவினர் கோபி செட்டிபாளையம், சத்தியமங்கலம் தாலுகாவில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொண்டனர்.அப்போது, ஒரு தனியார் விதை விற்பனை நிலையத்தில் இருப்பில் இருந்த 17 ஆயிரத்து 178 ரூபாய் மதிப்பிலான 780 கிலோ தரக்குறைவான நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை அரிசி ஆலைக்கு அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.மேலும், முறையான ரசீது வழங்காத, விதை இருப்பு விலை விவர பலகை வைக்காத, ஆவணங்கள் பராமரிக்காத தனியார் விதை விற்பனை நிலையத்தின் விதை வணிகம் முடக்கம் செய்யப்பட்டது.நடப்பு ஆண்டில் இதுவரை கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் பகுதிகளில் நெல், மக்காச்சோளம், பயறுவகை, காய்கறி விதைகளில் 184 மாதிரிகள் எடுக்கப்பட்டு, சோதனை நடத்தப்பட்டதில் ஒரு மாதிரி மட்டும் தரக்குறைவானதாக கண்டறியப்பட்டு, அவ்விதை உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் மீது கோபிசெட்டிபாளையம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.கடந்த 2010-2011ல் 736 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டதில், ஐந்து மாதிரிகள் மட்டுமே தரக்குறைவானது என, கண்டுபிடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.விதை விற்பனை உரிமையாளர்கள், விதை விற்பனை செய்யும்போது, உரிய விற்பனை ரசீதை விவசாயிகளுக்கு கண்டிப்பாக வழங்க வேண்டும். அதில், வாங்குபவர் கையெழுத்து பெற வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.இத்தகவலை விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமொழி தெரிவித்துள்ளார்.

**காளான் வளர்ப்பால் வருவாய் தாராளம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,02:18 IST

கோவை : இந்தியாவில் காளான்களுக்கான உணவுத்தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில், உற்பத்தி 10 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. காளான் வளர்ப்பில் பங்களிப்பு அதிகரிக்கும்போது, உள்நாட்டு உணவுத்தேவை பூர்த்தியாவது மட்டுமின்றி, பொருளாதார முன்னேற்றம், ஏற்றுமதி வாய்ப்பும் தாராளமாக உள்ளது. காளானில் சிப்பி, வைக்கோல், பால்

மற்றும் மொட்டு உட்பட பல்வேறு வகைகள் உள்ளன. சிப்பி மற்றும் பால் காளான் வளர்ப்பில் தமிழகம் முன்னிலை வகிக்கிறது. கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர், நாமக்கல் போன்ற பகுதிகளில் காளான் வளர்ப்பு அதிகமாக உள்ளது.

பிற மாவட்டங்களில் தற்போதுதான் பரவி வருகிறது. மலைவெளி பகுதியான ஊட்டியில் மொட்டு காளான் அதிகளவில் வளர்க்கப்படுகிறது. தேசிய அளவில் 650க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் மட்டுமே காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். தினமும் குறைந்தபட்சமாக 400 டன் காளான் உற்பத்தி செய்யப்படுகிறது. மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப உள்நாட்டு தேவையில், 10 சதவீதத்துக்கும் குறைவாகவே காளான் உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா, மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காளான்களுக்கு பலத்த வரவேற்பு உள்ளது.

ஆனால், உற்பத்தியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, இங்கு உள்நாட்டு தேவைகளையே நிறைவேற்ற முடியாத நிலையில், ஏற்றுமதி கானல் நீராகவே உள்ளது. சர்வதேச அளவில் சீனாவில் இருந்துதான் 60 சதவீத காளான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. எனவே, காளான் வளர்ப்பில் ஈடுபடுவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தால், உள்நாட்டு தேவை பூர்த்தியாவது மட்டுமின்றி, பொருளாதார முன்னேற்றம் காணுதல், ஏற்றுமதி போன்ற வாய்ப்புகள் உள்ளன. கோவை, வேளாண் பல்கலை பயிர் நோயியல் துறை தலைவர் சந்திரசேகர், பேராசிரியர் பிரகாசம் கூறியதாவது: இருதய நோய், சர்க்கரை நோய் உட்பட பல்வேறு பிரச்னைகளுக்கு காளான் நிவாரணியாகும்.

காளான் வளர்ப்புக்கு அதிக ஈரப்பதம், சீரான வெப்பநிலை முக்கியமானது. வைக்கோலில் காளான் திசுக்கள் இடப்பட்டு குறிப்பிட்ட தட்பவெப்ப நிலையில் வளர்க்கப்படுகிறது. குறைந்தபட்சமாக 30 முதல் 40 நாட்களுக்குள் காளான் உற்பத்தி செய்யப்படுகிறது. சில ஆண்டுகளாக காளான் வளர்ப்பில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்தும், தேவை கூடுதலாக உள்ளது. காளான் வளர்ப்பது எளிதானது என்றாலும், கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உற்பத்தி செலவை போல் கட்டாயமாக இரண்டு அல்லது மூன்று மடங்கு லாபம் பார்க்கலாம். ஏற்றுமதி வாய்ப்பும் தாராளமாகவே உள்ளது.

இயற்கையான, இருக்குமிடத்திலேயே எளிதான, லாபம் தரக்கூடிய காளான் வளர்ப்பை மேற்கொள்ள யாரும் முன்வருவதில்லை. சுய உதவிக்குழுவினர், சிறு தொழில்முனைவோர்கள், விவசாயிகள் உட்பட பலதரப்பினரும் காளான் வளர்ப்பில் ஈடுபடலாம். தினமும் ஐந்து கிலோ உற்பத்தி செய்ய குறைந்தபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வளர்ப்பு மனை அமைத்தால் போதுமானது. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

**வில்வேகம் - உயிர்ம பூச்சிக்கொல்லி**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,00:00 IST



வில்வ மரத்தின் பாகங்களில் இயல்பாகவே பூச்சிக்கொல்லி ஆற்றலும், பூஞ்சை எதிர்ப்புத் தன்மையும் உள்ளன. இந்தியாவில் இது இயல்பாக வளர்ந்து காணப்படுவதுடன் காலங்காலமாக மருத்துவம் மற்றும் ஆன்மிக முக்கியத்துவம் பெற்று விளங்குவதாலும் இதன் பூச்சிக்கொல்லி ஆற்றலை ஆராய முற்பட்டதன் விளைவாக, ஆச்சரியமூட்டும் உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன. இலை களில் இருந்து பிரித்தெடுக்கப்படும் முக்கிய எண்ணெய்கள், தானியக் கிடங்கில் உள்ள பூச்சிகளை கட்டுப் படுத்த வல்லவை. இப்பட்டையில் உள்ள இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றக் காரணிகள், வீட்டு ஈ மற்றும் கடுகு வண்டு ஆகியவற்றுக்கு எதிரான தன்மைகளை கொண்டுள்ளது. இதேபோல் கொசு விரட்டும் திறனும் கண்டறியப்பட்டு இருக்கிறது.

வில்வ விதைகளில் இருந்து பெட்ரோலியம் ஈதரைப் பயன்படுத்தி எண்ணெய் பிரித்து எடுக்கப்பட்டது. இதனை ஆய்வகச் சூழலில் வனமர இலை உண்ணிகளுக்கு எதிராக பயன்படுத்திப் பார்த்ததில், சாதகமான விளைவுகள் காணப்பட்டன. பின்னர் இதனை ஆய்வகம் மற்றும் நாற்றங்கால்களிலும் சோதிக்கப் பட்டது. அதற்குப்பிறகு தமிழகம் மற்றும் கேரளா மாநிலங்களில் தனித்தனியே புறச்சோதனைகள் செய்யப்பட்டன. இவற்றின் ஆய்வுமுடிவுகள் மூலம் வில்வ விதைகளில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட எண்ணெய், தேக்கு நாற்றுகளைத் தாக்கி அழிக்கும் இலையுண்ணிகளுக்கு எதிராக செயல்படும் திறன்மிகுந்த உயிர்ம பூச்சிக்கொல்லியாக பயன்படுத்த வல்லது என கண்டறியப்பட்டது. குறிப்பாக தேக்கு செடிகள் மற்றும் இள மரங்களைத் தாக்கும் இலையுண்ணி பெருத்த பொருளாதார சேதத்தை ஏற்படுத்தக் கூடியது. நாற்றங்கால்களிலும் இளவயதுஉடைய மரங்களிலும் முற்றிலுமாக இலைகளைத் தின்றுவிடும் அபாயம் உள்ளது. இவை மரங்களைக் கொன்றுவிடுவதில்லை. மாறாக, மரத்தின் வளர்ச்சி விகிதத்தைக் கடுமையாக பாதிக்கிறது. இந்தியாவின் அனைத்து தேக்கு தோப்புகளையும் தாக்கும்

வல்லமை கொண்டவை இவை. ஒரு ஆண்டில் எப்போது தாக்கும் என ஊகித்து அறிய இயலாதவை. சராசரியாக இலையுண்ணிகளால் ஏற்படும் சேதாரம் ஒரு மரத்திற்கு 5.23 கன அடி என கண்டறியப்பட்டு உள்ளது. மொத்த வெட்டு மர அளவில் 30-40" இழப்பு ஏற்படுத்தக் கூடியது. எனவே இந்த இலையுண்ணிகளை கட்டுப்படுத்துவது மர சாகுபடியாளர்களுக்கு இருந்துவரும் மிகப்பெரிய சவாலாகும். இந்நிலையில் இந்நிறுவனத்தில் வில்வ உயிர்ம பூச்சிக்கொல்லி கண்டறியப்பட்டது இதற்கு ஒரு வரமாக வாய்க்கப் பெற்றுள்ளது. **தொடர்பு**: இயக்குனர், வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம், கோவை, 0422-248 4100.**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

**ஆடி மாதத்தில் ஆடுகளுக்கு தேவை அதிகரிக்கும்**

ஜூலை 13,2011,00:06



ஈரோடு: ஆடு வளர்ப்பு தொழிலில் ஏற்பட்ட நசிவின் காரணமாக, ஆட்டுக் கறியின் விலை, 300 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்நிலையில், ஆடி மாதத்தில் ஆடுகளுக்கு தேவை அதிகரிக்கும் நிலையில், இதன் விலை கிலோவுக்கு, 20 ரூபாய் மேலும், உயரும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் ஈரோடு மாவட்டம், செம்மறி ஆடுகள் வளர்ப்பில் முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது இடத்தை திருநெல்வேலியும், மூன்றாம் இடத்தை சேலம் மாவட்டமும் பெற்றுள்ளன. சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களிலும் ஆடு வளர்க்கும் தொழில், முதன்மை தொழிலாக மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

ஆடு வளர்ப்போர் மட்டுமின்றி, விவசாயிகளும், மாற்று தொழிலாக ஆடு வளர்ப்பதை மேற்கொண்டு வருகின்றனர். தமிழகத்தில் கொடி கட்டி பறக்க துவங்கிய ரியல் எஸ்டேட்டால் மேய்ச்சல் காடுகளும், விளை நிலங்களும் வீட்டு மனை நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

ஆடு வளர்ப்புக்கான மேய்ச்சல் இடங்களின் பரப்பு, வெகுவாக குறைந்தது. இதுவே ஆடு வளர்ப்போர் மத்தியில் கடும் அச்சத்தை ஏற்படுத்தி வந்தது.

தமிழகத்தின் பெரிய ஆட்டுச் சந்தைகளான மேச்சேரி, ஆத்தூர், நாமக்கல் மாவட்டம் மோர்பாளையம், திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம், தூத்துக்குடி மாவட்டம் சீவலப்பேரி, மணியாச்சி ஆகிய இடங்களில், விற்பனைக்கு வரும் ஆடுகளின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஆட்டுக் கறிக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், விற்பனைக்கு குறைந்த அளவில் ஆடுகள் வருவதால் ஆட்டின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஆட்டின் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, கறியிலும் எதிரொலித்துள்ளது.தமிழகத்தில் சேலம், சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் ஆட்டுக்கறியின் சராசரி விலை கிலோ, 300 ரூபாயாக உயர்ந்து உள்ளது.ஜூலை,17ல் தமிழகத்தில் ஆடி மாதம் துவங்குகிறது. இந்த மாதத்தில் தமிழகத்தின் முக்கிய நகரங்கள் மட்டுமின்றி கிராமங்களிலும் மாரியம்மன் கோவில்களில் பண்டிகைகள் கொண்டாடப்படுகிறது. இந்த பண்டிகை காலங்களில் ஆடுகளுக்கு தேவை அதிகரிப்பது வழக்கம்.ஆடி பண்டிகை காலங்களில், ஆடுகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என, கருதிய வியாபாரிகள் தற்போது, அதிக அளவில் ஆடுகளை கொள்முதல் செய்து வருகின்றனர். இதனால், தமிழகத்தில் ஆட்டின் விலையில், 200 ரூபாய் முதல், 500 ரூபாய் வரை உயர்வு ஏற்பட்டுள்ளது.உதாரணமாக, ஏழு கிலோ எடை கொண்ட ஆடு, 2,200 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 2,600 ரூபாய் முதல், 2,800 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு அப்படியே கறி விலையில் எதிரொலிக்கும் பட்சத்தில், ஆடி பண்டிகை காலங்களில் ஆட்டுக்கறியின் விலை கிலோ, 330 ரூபாய் முதல், 350 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்கின்றனர் வியாபாரிகள்.சேலம் மாவட்ட மீன், ஆட்டு இறைச்சி வியாபாரிகள் சங்கத்தின் பொருளாளர் பழனிசாமி கூறியதாவது:

தமிழகத்தில் ஆடு வளர்ப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. ஆடு வளர்ப்பதற்கு தேவையான மேய்ச்சல் இடம் தற்போது இல்லை. காடுகளையும், மலைகளையும் கூட ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் விட்டு வைக்கவில்லை. தமிழகத்தில் ஆடுகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த தட்டுப்பாட்டை சரி செய்ய வியாபாரிகள், கர்நாடகா மாநிலத்திலிருந்து ஆடுகளை வாங்கிக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். தமிழக ஆடுகளை ஒப்பிடுகையில் கர்நாடக மாநில ஆடுகளின் கறியில் ருசி குறைவாகவே உள்ளது. தற்போது அந்த ஆடுகளுக்கு தமிழகத்தில் மவுசு குறைந்துள்ளது.தமிழக ஆடுகளுக்கு மவுசு அதிகரித்து வரும் நிலையில், ஆடி மாதத்தில், ஆடுகளுக்கு தேவை மேலும் அதிகரிக்கும் என்பதால் ஆட்டுக்கறி விலையில் கிலோவுக்கு, 30 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை விலை உயர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்

**கூடுதல் விலைக்கு உர விற்பனையா? ஃபோனில் புகார் தெரிவிக்க வேளாண் துறை அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,02:35 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தனியார் உர விற்பனை நிலையங்களில் உரங்கள் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டால் புகார் தெரிவிக்கலாம்' என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் தனியார் உர விற்பனையாளர்கள் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு மிகாமல் உரம் விற்க அறிவுறுத்தப்படுகிறது. விற்கும் உரத்திற்கு கட்டாயம் பில் வழங்க வேண்டும். விலைப்பட்டியலை விவசாயிகளுக்கு தெரியும் வண்ணம் வைத்திருக்க வேண்டும். தவறும் உர விற்பனை நிறுவனம் மீது கடுமையான மேல் நடவடிக்கை எடுக்கப்படும். உர விற்பனையில் ஏதேனும் தவறு நடப்பதாக விவசாயிகளுக்கு தெரிந்தால் வேளாண் இணை இயக்குநர் மொபைல் எண்-90470-72743 வேளாண் உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) மொபைல் எண்- 94439-54646, வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுப்பாடு) மொபைல் எண்- 990470-72756 ஆகிய நம்பரில் உடனடியாக தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். புகார் கூறப்படும் நிறுவனம் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**விளை பொருள் விற்பனை விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,02:35 IST

பெரம்பலூர்: "எளம்பலூர் சமத்துவபுரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வைத்து விவசாய விளை பொருட்களை விற்பனை செய்து பயன்பெறலாம்' என வேளாண் துணை இயக்குநர் சிவசங்கரன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் அருகே எளம்பலூர் சமத்துவபுரம் எதிரில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைந்துள்ளது. இதில் வரும் 15ம் தேதி முதல் விவசாயிகளின் வேளாண் விளைப்பொருட்களான மக்காச்சோளம், நிலக்கடலை, எள் போன்றவற்றை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நல்ல விலைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை நன்கு காயவைத்து சுத்தம் செய்து ஒழங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வந்து நல்ல விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம்.

**மா சாகுபடியால் தொடர் பாதிப்பு: மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,02:42 IST

போடி: "மா' சாகுபடியால் தொடர் பாதிப்பை பெறும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் போடியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வர வேண்டும்.தேனி மாவட்டத்தில் போடி, குரங்கனி, முந்தல், வலசத்துறை, கொட்டகுடி, பெரியகுளம், ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு, கம்பம், கூடலூர் உள்ளிட்ட பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கருக்கு மேல் ' மா ' சாகுபடி நடக்கிறது.தேனி மாவட்டத்தில் மாம்பழ சந்தை என்பது இல்லை. சீசன் காலங்களில் மாம்பழங்கள் வடமாநிலங்களுக்கும், கேரளாவிற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. மா உற்பத்தி அதிகரிக்கும் நேரங்களில் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. விலை கிடைக்கும் நேரங்களில் உற்பத்தி குறைகிறது. இதனால் கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக பெரும் பாதிப்பை விவசாயிகள் சந்தித்து வருகின்றனர். கடும் வறட்சியால் பல பகுதிகளில் 40 முதல் 50 ஆண்டு காலம் வரை வளர்ந்த மரங்களும் பட்டுப்போயுள்ளன.விளைச்சல் இருந்தும் விலை இல்லாததினால் மரங்களில் உள்ள பழங்களை பறிக்காமல் விட்டு விடுகின்றனர். பறித்த பழங்களுக்கு விலை இல்லாத நிலையில் குப்பையில் கொட்டும் அவலம் ஏற்படுகிறது.பதனிடும் தொழிற்சாலை: மாம்பழ சந்தை அமைக்கவும், மாம்பழ பதனிடும் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்பது விவசாயிகளின் பல ஆண்டு கோரிக்கையாகும்.

**வேளாண் தொழில் நுட்பங்களைவிவசாயிகளுக்கு விளக்கிய கலெக்டர்**

பதிவு செய்த நாள் : ஜூலை 13,2011,01:25 IST

தென்காசி:கணக்கப்பிள்ளைவலசையில் நடந்த வயல்தின விழாவில் வேளாண் தொழில் நுட்பங்களை மாவட்ட கலெக்டர் நடராஜன் விவசாயிகளுக்கு விளக்கினார்.
தென்காசி வட்டாரம் கணக்கப்பிள்ளைவலசையில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தில் வயல் தின விழா நடந்தது. விவசாயி புன்னைவனம் தோட்டத்தில் நடந்த இவ்விழாவிற்கு மாவட்ட கலெக்டர் நடராஜன் தலைமை வகித்து விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்களை விளக்கினார். தோட்டத்தில் கூடியிருந்த திரளான விவசாயிகளிடம் கலெக்டர் நடராஜன் பேசும் போது, ""ஆண்களுக்கு கற்று கொடுத்தால் அது அவருக்கு மட்டும்தான் பயன்படும். பெண்களுக்கு கற்று கொடுத்தால் அது குடும்பத்திற்கே பயன்பெறும். அதனால்தான் இதுபோன்ற வயல் தின விழாவில் பெண் விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்கள் கற்று கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு செயல் முறை விளக்கங்களும் செய்து காட்டப்படுகிறது.மாட்டு சாணம், மண்புழு கழிவு, பன்றி சாணம் போன்றவற்றை பயிர்களுக்கு உரமாக இட்டால் மகசூல் அதிகரிக்கும்.

விவசாயிகள் நல்ல லாபம் பெறலாம். பயிர்களுக்கு எந்த காலத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை வேளாண்மை துறையினரின் ஆலோசனையை பெற வேண்டும்.

மண் வளம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். இதற்காக நிலத்தின் மண்ணை பரிசோதனை செய்ய வேண்டும். ஒரே பயிரை தொடர்ந்து பயிரிடாமல் சுழற்சி முறையில் பயிர்களை பயிரிட்டு நல்ல லாபம் பெற வேண்டும்.ஒவ்வொரு மனிதனுக்கும் மகிழ்ச்சி முக்கியம். விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மாதந்தோறும் நெல்லையில் நடக்கும் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாமில் திரளான விவசாயிகள் கலந்து கொள்ள வேண்டும்" என்றார் கலெக்டர் நடராஜன்.மேடை நிகழ்ச்சிக்கு கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம் முன்னிலை வகித்தார்.

தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) உதயகுமார் வரவேற்றார். மாவட்ட திட்ட அலுவலர் சங்கர், அட்மா சேர்மன் சுப்பையா, கணக்கப்பிள்ளைவலசை பஞ்.,தலைவர் தங்கவேல்சாமி, முன்னோடி விவசாயி புன்னைவனம், பெரியபிள்ளைவலசை பஞ்.,தலைவர் ராமலட்சுமி வாழ்த்தி பேசினர்.நெல்லை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் அழகிரிசாமி, பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் குளத்தூரான் பிள்ளை, கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன், மத்திய திட்டங்கள் வேளாண்மை துணை இயக்குநர் குமாரசாமி, மாநில திட்டங்கள் வேளாண்மை துணை இயக்குநர் ஜரிஷ்சேகர் தொழில் நுட்ப உரையாற்றினர்.

வேளாண்மை துறை, பட்டு வளர்ச்சி துறை, தரணி சர்க்கரை ஆலை, ஆர்.வி.எஸ்.வேளாண்மை, தோட்டக்கலை துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை துறை, எண்ணெய்பனை துறை சார்பில் கண்காட்சி நடந்தது. விவசாயிகள் கலந்துரையாடல், குழு விவாதம், தொழில் நுட்ப திடல்களை பார்வையிடல் நடந்தது. தென்காசி ஆர்.டி.ஓ.காங்கேயன் கென்னடி, தாசில்தார் விஜயா, செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன், வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணியன், சுதா, பட்டு வளர்ச்சி துறை அருணாசலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய தென்காசி துணை வேளாண்மை அலுவலர் சேக்முகைதீன் நன்றி கூறினார்.

### பட்டு வளர்ப்பு பாடம்

பதிவு செய்த நாள் : ஜுலை 13,2011,01:52 IST

குன்னூர் : குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளி தேசிய மாணவர் படையினர், பட்டு வளர்ப்பு குறித்து அறிந்து கொண்டனர். குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியின் தேசிய மாணவர் படையினர், பள்ளி தலைமையாசிரியர் ஜான்சன் வழிகாட்டுதல் படி, குன்னூர் சிம்ஸ்பூங்காவில் உள்ள பட்டு வளர்ச்சி மையத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். மைய இயக்குனர் ராஜலட்சுமி மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி, பட்டுப்புழு வளர்ப்பு, அவற்றில் இருந்து பெறப்படும் பட்டு, பட்டின் பயன்பாடு குறித்து படிப்படியாக விளக்கினார்.

தினத் தந்தி

உழவர் சந்தைகளில்

# காளான் விற்பனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

ஊட்டி, ஜூலை.13–

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை துணை வேளாண்மை இயக்குனர் முரளிதரன் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் விளையும் பல்வேறு காய்கறி மற்றும் பழ பயிர்கள் ஊட்டி, குன்னூர் மற்றும் கோத்தகிரி ஆகிய உழவர் சந்தைகளில் விவசாயிகள் தினந்தோறும் நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மேலும் நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் அனைத்து உழவர் சந்தைகளிலும் காளான் விற்பனை செய்ய வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மாவட்டத்தில் விளையும் காளான்களை விவசாயிகள் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது.

எனவே நீலகிரி மாவட்டத்தில் காளான் பயிர் செய்துள்ள விவசாயிகள் காளான்களை அனைத்து உழவர் சந்தைகளிலும் நேரிடையாக விற்று பயன்பெறலாம். மேலும் தொடர்பிற்கு அனைத்து உழவர் சந்தை நிர்வாக அலுவலர்களை அணுகுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,870-2,950

### மணிலா பயறு

80கிலோகொண்ட மூட்டை
4,300-4,360

### கடலை எண்ணெய்

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,350-00

### கடலை புண்ணாக்கு

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,575-00

### தேங்காய் எண்ணெய்

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,856-00

### நல்லெண்ணெய்

குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேஸ்வரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 9,500-00
டின் (15கிலோ) 1,700-00

### விளக்கெண்ணெய்

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
10,700,00
15கிலோடின் (வரிஉள்பட) 1,830-00

### சூரியகாந்தி எண்ணெய்

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,155.00

### ரீபைண்டு ஆயில்

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,555.00

### வனஸ்பதி

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,095.00

### பாமாயில்

10 கிலோ டின் (வரி தனி)
535-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,ஜூலை.12-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 11,500 | 150.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 3,800 | 108.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,960 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,300 | 38.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,400 | 73.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,000 | 46.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 4000 | 40.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,200 | 42.00 |
| நிலக்கடலை(60கி) | ரூ. 7,200 | 72.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,600 | 66.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,100 | 31.00 |
| சர்க்கரை | ரூ. 2,700 | 27.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,ஜூலை.12-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு-

1. வி.797 22எம்.எம் ரூ. 5,905
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7592
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9,510
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,717
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,404
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,810
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 17,153

## கோவை உழவர் சந்தை

கோவை,ஜூலை.12-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 28-00 | காலிப்பிளவர் | ரூ. | 20-22 |
| கத்தரிக்காய் | ரூ. | 16-20 | பொறியல் தட்டை | ரூ. | 16-18 |
| வெண்டைக்காய் | ரூ. | 18-20 | தேங்காய் | ரூ. | 8-11 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 11-12 | பட்டாணி | ரூ. | 100-00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10-11 | பூண்டு | ரூ. | 85-00 |
| புடலை | ரூ. | 16-22 | கறிவேப்பிலை | ரூ. | 14-12 |
| பீர்க்கன்காய் | ரூ. | 13-18 | அகத்தி | ரூ. | 17-00 |
| சுரைக்காய் | ரூ. | 12-14 | வாழைக்காய் | ரூ. | 20-00 |
| பாகற்காய் | ரூ. | 20-18 | குடைமிளகாய் | ரூ. | 28-32 |
| கொத்தவரை | ரூ. | 15-14 | சாதா பீன்ஸ் | ரூ. | 12-14 |
| பூசணிக்காய் | ரூ. | 8-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 4-6 | கறிபீன்ஸ் | ரூ. | 18-00 |
| பேராக்காய் | ரூ. | 18-20 | பட்டர்பீன்ஸ் | ரூ. | 24-28 |
| பச்சை மிளகாய் | ரூ. | 25-30 | காளான் | ரூ. | 80-150 |
| குண்டு மிளகாய் | ரூ. | 28-00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11-13 |
| சின்னவெங்காயம் | ரூ. | 20-18 | மாங்காய் | ரூ. | 10-12 |
| பெரியவெங்காயம் | ரூ. | 14-00 | திராட்சை | ரூ. | 45-00 |
| இஞ்சி | ரூ. | 34-00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 24-26 | கொய்யா1கிலோ | ரூ. | 28-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-20 | மாதுளை1கிலோ | ரூ. | 80-45 |
| சேனைகிழங்கு | ரூ. | 28-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 14-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 30-00 | வரமிளகாய் | ரூ. | 90-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | மாம்பழம் | ரூ. | 20-50 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | ஆப்பிள் | ரூ. | 110-130 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14-00 | சாத்துக்குடி | ரூ. | 32-00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18-24 | நெல்லிக்காய் | ரூ. | 36-30 |
| முள்ளங்கி | ரூ. | 12-16 | ஆரஞ்சு | ரூ. | 70-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 20-24 | வெள்ளரி | ரூ. | 14-29 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12-20 | புளி 1 கிலோ | ரூ. | 75-00 |
| நூல்கோல் | ரூ. | 22-24 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 75-00 |
| கொத்தமல்லி | ரூ. | 18-24 | அவரை | ரூ. | 18-16 |
| ட்ரின்பீன்ஸ் | ரூ. | 22-00 | நிலக்கடலை | ரூ. | 35-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | மக்காச்சோளம் | ரூ. | 3.50 |
| கலர்கோஸ் | ரூ. | 15-00 | தர்பூசணி | ரூ. | 10-14 |
| புதினா | ரூ. | 16-00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 24700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 25,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 26,250 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 10,500 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9100 |
| கொப்பரை நாடன் | ரூ. 6075 |
| கொப்பரை ராசு | ரூ. 5300 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 7100 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 6500 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6700 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 20090 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21150 |
| ரப்பர் பால் | ரூ. 16000 |
| காப்பி | ரூ. 11100 |
| உருண்டை காப்பி (52 கிலோ) | ரூ. 3300 |
| நேந்திரகாய் | ரூ. 2500 |
| இஞ்சி | ரூ. 1100 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,ஜூலை.12-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,660 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1140 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1180 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1040 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1140 | 72.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,350 | 95.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 125.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 57.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 100.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,020 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,020 | - |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.180.00 | அதிகபட்சவிலை | ரூ.265.00 |
| சராசரி விலை | ரூ.175.76 | சராசரி விலை | ரூ.242.52 |
| குறைந்தபட்சவிலை | ரூ.175.00 | குறைந்தபட்சவிலை | ரூ.210.00 |

**பட்டு நூல் ரூ.1,697**